(2022-23-ஆம் ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ- மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை – 2)

**SUBJECT CODE** 22PTM414

**REG. NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : பொள்ளாட்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2024**

**எம்.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**நான்காம் பருவம்** **நேரம் : 3 மணி**

# தொன்மை இலக்கியம்

**பகுதி – அ ( 10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.(K1)**

1. பொருநராற்றுப்படையின் ஆசிரியர்?

(அ) முடத்தாமக்கண்ணியார் (ஆ) நக்கீரனார் (இ) கபிலர் (ஈ) நப்பூதனார்

2. 'நின்ற சொல்லர் நீடுதோறும் இனியர்' - இப்பாடல் எத்திணைக்குரியது?

(அ) நெய்தல் (ஆ) குறிஞ்ச் இ) முல்லை (ஈ) பாலை

3. பிணிமுகம் என்பது

(அ) மயில் (ஆ) காலை (இ) யானை (ஈ) கருடன்

4. பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தைப் பாடியவர்?

(அ) பரணர் (ஆ) அரிசில்கிழார் (இ) கபிலர் (ஈ)காக்கைப்பாடினியார்

5. செலவு - பொருள் தருக.

(அ) தொலைவு (ஆ) மறைதல் (இ) வறுமை (ஈ) பயணம்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)**

6. 'ஆறு' என்பதன் பொருளுரைக்க?

7. வேட்கைப்பத்தில் உரைக்கப்படும் மன்னன் பெயரைக் கூறுக.

8. 'நெடுந்தொகை' என வழங்கப்பெறும் நூல் எது?

9. புறநானூற்றில் நும் பாடப்பகுதியிலமைந்த பாடல்களின் ஆசிரியர் யார்?

10. ஐந்திணை ஐம்பதின் திணை வைப்பு முறையைச் சுட்டுக.

**பகுதி – ஆ ( 5 × 3 = 15 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. (அ) கரிகால்பெருவளத்தானின் விருந்தோம்பல் பண்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) நற்றிணைக் குறிஞ்சித் தலைவனின் பண்புகளை 'நின்ற சொல்லர்' - பாடல் வழி எடுத்துரைக்க.

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. (அ) குறிஞ்சிக்கலி கூறும் இராவணின் செயலை எழுதுக.

(அல்லது)

(ஆ) வேட்கைப் பத்தின் தலைவி ஆதன்அவினியை எவ்விதம் வாழ்த்தினாள்?

13. (அ) அறுமுகப் பெருமானின் வெற்றிச் செயல்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'அன்னை இனி நம்மைத் தினைப் புனத்திற்கு அனுப்பமாட்டாள்' என்றவாறு அமைந்த நித்திலக்கோவை தோழி கூற்றை எழுதுக.

14. (அ) ஏழாம் பத்தில் கபிலர் எடுத்துரைக்கும் பாரியின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்அண்டிரன் துறக்கம் புகுந்தசெய்தியை முடமோசியார் பாடல் வழி குறிப்பிடுக.

15. (அ) பாலைநிலத்தில் யானைகளின் செயலினை ஐந்திணை ஐம்பது எவ்விதம் கூறுகிறது?

(அல்லது)

(ஆ) நோய் தீர்க்கும் தன்மையை வள்ளுவரின் குறளுடன் கூறுக.

**பகுதி – இ  ( 5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.(K4/K5)**

16. (அ) பொருநராற்றுப்படை குறிப்பிடும் நிலமயக்கத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருநன் அரண்மனையில் துயின்ற பாங்கினை எடுத்துரைகக்க.

17. (அ) கார்கால வரவினை குறுந்தொகை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) தேன் கலந்த பாலினும் இனிதென தலைவி எதனை உரைக்கிறாள்?

18. (அ) திருப்பரங்குன்றத்தின் சிறப்பை செவ்வேள் பாடல்வழி விவரி.

(அல்லது)

(ஆ) பரத்தையோடு தலைவனுக்கு உண்டான அன்பை மருதக்கலிவழி விளக்குக.

19. (அ) செல்வக்கடுங்கோ வாழியாதனின் பண்பு நலன்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழன் கோப்பெருநற்கிள்ளியின் சிறப்பினை முடமோசியார் எவ்விதம் வாழ்த்தியுரைத்தார்?

20. (அ) ஐந்திணை ஐம்பதின் குறிஞ்சிப் பாடல்வழி தோழி தலை மக்களுக்கு உரைத்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) உழவின் சிறப்பினை மேன்மையுடன் விளக்கு.

*ETHICAL PAPER*

*****